T. 13729

உ

சிவமயம்.

முருகன் றுணை.

மீனாக்ஷியம்மை தோத்திர வகவல்.

62.5592.7
2002

இஃது

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்களில் ஒருவராகிய

தஞ்சை இரும்புக்கடை

முருகதாசன் பழனிவேல் பிள்ளையால

இயற்றப்பட்டது.

தஞ்சாவூர்:

ஜி. எஸ். மணியா அண்டுகோ.

1907.

உ

சிவமயம்.

முருகன் றுணை.

ஸ்ரீ ஞாக்ஷியம்மை தோத்திர வகவல்.

கலி விருத்தம்.

அம்பு லாஞ்சடை யண்ணலின் பாகமார்
வம்பு லாங்குழல் வல்லியி னைவரு
னிம்ப ரிற்பெற வின்னரு ளாத்தருந்
தம்பி மாமுக வன்றுணைக் காள்கவே

—:o:—

நூல்.

அகவல்.

ந்துயி ரனைத்து மோம்பு றற்குறு
றுடைச் செவ்வி நயக்க தாயதாஉ
ஊவிலாப் பொய்கை யுட்களித் தமர்வன
றுகாற் புள்ளினஞ் சிறைகாற் றசைத்து
ருகாற் றேறலுண் ணசையாற் றிரிதரு
பந்தாட் பாசடைக் குவளை யொப்பதாஉம்
ர்ளையைப் பொருது வடிவாள் டோற்பிற
ங்கயற் கண்ணிநின் னலர்தரு வனப்பாற்
ங்கதிர் காண்டலிற் சேயிதழ் விரிதரு
பாங்குறு முளரிப் புதுமலர்ப் பதத்தின்

மான்மிகு மாலான் மலைகொடு கலக்கி
மேவுநல் லமுதை யிமையவர்க் களித்த
வாழ்கடற் றோன்றி யழகுறச் சமைந்த
சூழ்தரு செங்கேழ் கடருளித் துருமம்
போலுறு குணத்தன பொருந்திய விரல்கள்.
செந்நிறப் பஞ்சிற் றிகழ்குழம் பூட்டிய
வைந்துறுப் படக்கு மாமையாம் புறவடி.
சிந்தையின் மகிழ்கூர் சிறுவ ராடிடும்
பந்துக் கிணையாப் பகர்வன குதியே.
யரும்பொ னைக்கொள விரும்புறு மவர்கடம்
பிரும்பொருள் கொண்டள வுறும்பொனை யளிக்க
நறுந்துலைக் கிருபா றொட்டிய தட்டெனப்
பெரும்புக ழோடும் பிறங்கிய பரடே.
வெஞ்சமர் புரிய விரும்புறு வீரர்
நஞ்சினை யூட்டி நனியுறக் கூர்செய்
துஞ்சுறப் பகையைத் துணித்திடு மம்பு
விஞ்சுமாப் புட்டில் விதங்களைக் காலே.
வெட்டினை யிரட்டெண் ணியைகலை மதியம்
பட்டிடு பாறை விரவினற் றுணையைக்
கிட்டுவா னெண்ணிக் கிளத்துமவ் வெல்லையிற்
கிட்டா தாயிற் பொட்டெனத் தன்னுடல்
வெற்றாய்க் காணும் விதமுடை ஞெண்டினை
பொட்டிய வாற துறுமுழந் தாளே.
காட்டகத் துறையுங் கோட்டுடைப் புகர்மா
நீட்டியல் கரம்போ னிரைகுறங் கிரண்டே
முளரியுங் குமுதமும் முல்லையுங் முருக்குங்

தவளநேர் சங்குந் தகவுடை வள்ளையும்
பெருமலை யிரண்டும் பிணைப்புறத் தாங்கி
பொல்குறுங் கொடிபோன் றுளவோ விலவோ
வென்னுமோ ரையமுற் றெண்ணுநற் குரிய
மின்னலை வெருட்டு மெல்லிடை; யதனிற்
பொன்னினு மணியினும் புனைதுகி லிலங்கக்
காஞ்சிசூழ்ந் திலகு கவினுடைத் தாகி
மேகலை யொளியான் மிக்கிரு ளோட்டு
நன்னல மேயப் பன்னலச் சிறப்பார்
மூவடி யளக்கச் சேவடி பரப்பி
யாவரு முவந்து மைமலைக் காப்பான்
றாதுசென் றுவந்த துளவ மாலிகை
பூண்டிடு மாயோன் புகழ்பெறத் துயிலு
மாலிலை போலு மடிவயி றென்றே.
நீர்ச்சுழி போன்ற தோர்ச்சிறப் புடைத்தா
யண்டமெ ரண்ட மனைத்தையுந் தருவான்
கண்டநான் முகற்றரு முண்டக மதனிற்
பண்டரு சுரும்பின மண்டுறு வகைபோற்
கொண்டிடு முரோமக் கொள்கைய முந்தி.
கல்லும் முள்ளுங் கரடும் முரடும்
புல்லும் மரனும் பொருந்தில தாகிக்
கறுத்து வெளுத்த கவினுடைத் தாயதூஉம்
நஞ்சமு மமுதமு நல்குவ தாயதூஉ
மான்மதம் புழுகு பதித்த சந்தன
மேன்மைசேர் குங்குமம் விரவிய தாயதூஉங்
கதித்துப் புடைத்துக் கால்பரந் தகன்று

கொதித்துக் குளிர்ந்து குவிந்த தாயதரமும்
பொற்சுணங் கமைந்த பொலிவுடைத் தாயதர
மாரமுங் கோவையு மணிந்த தாயதரமும்
வன்மை மென்மை வாய்ந்த தாயதரந்
தில்லைமேசர் மேருவெனத் திரண்ட தடமுலைத்
யின்னமும் படாது திடர்படுத் துருகெய்யார்
பொன்னிலங் கயர்க்கை பொருந்து சச்சிலை
மன்னுறப் பிணித்த வாங்கொளுங் குயமும்.
பச்செனப் பைவெசை பரக்குரத் திரண்ட
யுச்சித வெதிர்புரை யேயுநய தோள்.
கமுகினைப் பாளைக் கின்பெற விரிய
நகுகுறச் சமைந்த தாயகந் தரமே.
கரும்பினை மொய்யாக் கடரினை வென்ற
நறும்புனற் பூகமொடு புரினை வென்ற தாயதி
னரும்புறு தேறலருமறை மூப்பியலும்
விரும்புறு பொன்னின் மெய்யம் பலத்தினு
நடமிடு மம்மா னயந்தா நற்குறிக்காய்க்
கிடமுறு மல்லிப் போதச் சிறந்துறை மகரம்.
அலைவா யிப்பி யரிதினி லீன்ற
நலம்வாய் முத்தை நன்குறத் தொலையா
நிரைநிரை யாக நேருறத் தொடுத்தன
கலைசேர் மதியங் கறைபடாத் தோன்ற
இறுமல் வகையி னொப்பன மூரல்.
வல்லிரு ளோடு மாயையா யிருளும்
வெல்லுநல் லொளியான் விளங்குறா உ மணியொடு
மென்னிளம் பூப்போன் றிலகிய மூக்கே.

யருமறை தெரிந்த வந்தணா ரினிது
நறுமலர் நன்னீ ரொடுநின் னருளைப்
பெறுமா றகநெகப் பேறுறுநல் வேதத்
திருமொழி யிறைந்தாங் கியல்வ தாயதூஉ
மற்பமை யாயவெ ருப்படு காம்
னறும்பும் விரிதரு மற்புடை மலர்போற்
பொற்புறு முகப்பொ னட்டியன் மடவார்
விரல்கொடு நடாத்துய வீணை யின்னிசைத்
திறனுறு பாகமுஞ் செவ்வித் தாயதூஉம்
புன்மைபா வென்சொற் பொருத்து மின்னரு
ளிம்மையிற் கொடுத்தா ளியல்புடைத் தாயதூஉ
மெல்லிரண் டிசைத்தன வியங்குறு உமணியொடு
வள்ளைப் பொருவும் வளப்புறு செவியே.
அயமென கூர்ந்து மரிபடர்ந் தநன்றும
பம்புறு மின்னருள் பயப்ப தாகியும்
வெண்ணிற மதி னண்ணுறு தேற
லுண்டுறு வண் டதனை யொப்பத் தோன்று
மென்னுள தகவா திருப்பன கண்ணே.
யுருவரு விலா வொருபொரு ளல்லா
திருவினை யெடுத்தில் வுலகிய னடாத்து
முத்தொழிற் குரிய மூவகைத் தேவரோ
டெத்திறத் தானு மிருமனந் தளரார்
சித்திரப் பாவையி னைத்துணர் நுவத்திற்
கண்முகிழ்த் திபங்குங் காட்சி யோரையு
மெழுவகைத் தோற்றத் தியனுநல் லுயிரையு
மருமலர் கொண்டு மனத்தினைக் கலக்கி

யரிவையர் தமக்கே யடிமையாச் செய்யு
முருவிலி கையி லுயர்வுபெற் றிலகு
சுரும்புநா ணொடு சுடர்கணை வில்லி
னரும்புநன் னீல மலைவேகர்த் தனைபோற்
கண்ணின்மேற் றோன்றுங் கரும்புரு வம்மே.
மட்டுறச் சமைந்த மாண்புறு திலகமோ
டெட்டுநாட் பிறைபோன் றிலகிய நுதலே.
கொண்டல்போ லிருண்டு தழைந்துநெய் தடவி
வண்டிசை பாட மருமலர் சூடித்
தலையணி யோடு தாழுறப் பின்னு
நிலையணி கொண்டு நீண்டமாக் கூந்த
லின்னன வனப்பா ரெம்பெரு மாட்டி
யோருரு வெடுத்திவ் வுலகினைக் காக்குந்
தாழ்விலாக் குணத்திற் றுய்யோன் றவமே
யீருரு வாகி யிருவினைப் பயப்பி
லூழினை யூட்டு மொருத்தியு நீயே.
மூவுரு வெனவு முச்சுட ராகி
மேவு மகத்தனி லேட்டுறு வோயே.
நான்குரு வாகி நான்மறைப் பொருளாய்த்
தீங்கிலா நின்ற திகம்பரி நீயே.
பஞ்ச முகமாய்ப் பாரிலைந் தொழிற்குங்
குஞ்சித பாதங் கொள்ளுவோய் நீயே.
யாறு முகத்தோ டசுரர் குலத்தை
வேறு படுத்தும் வித்தகி நீயே.
யேழுரு வாகி யெழுநில வவற்றைத்
தாழ்விலாக் காக்குந் தயாபரி நீயே.

T.13729

யெட்டு ருகபா யெண்ணெண் கலையா
யட்டமா சித்தி யளித்திடு வோயே.
நவவுரு வெடுத்து நவகண் டத்து
மவரவர் மனத்தி னாழ்ந்திருப் போயே.
பத்துத் திசையும் பரவுமின் னருளை
யெத்திறத் தடியே னியம்புதற் குரித்தா
மோங்கா ரத்தி னுள்ளொளிப் பொருளே ;
ரீங்கா ரத்தி னின்மலா னந்தி ;
ஸ்ரீங்கா ரத்திற் சின்மய ரூபி;
யையுங் கிலியுஞ் சவ்வுமாய் நின்றோய்;
யேகாட் சரத்தி யெம்பொரு ளாட்டி;
பஞ்சாட் சரத்திற் பரிவுகூர்ந் திருப்போய் ;
யட்டாட் சரத்தி யங்கமா தாவே;
சடாட்சர ரூபச சச்சிதா னந்தி;
லொன்றாய்ப் பலவா யுருவா யருவாய்;
நன்றாய்த் தீதாய் நடுநிலை யாகி;
யெப்பொரு ளுக்கு மிறைவியாய் நின்ற ;
தற்பரா னந்தத் தனிமுத லீபே;
யாணைப் பெண்ணு மலியாய் மற்றுங்
காணும் பொருளாய்க் கரந்துறை வோயே ;
சித்துரு வாகித் திரிகுணங் களினுட்
சத்துவ குணத்திற் றனமர்ந் திருப்போ
யன்பர்க டுதிக்க வவர்மனத் துயரை
யிம்பரிற் றீர்த்தா ளோக நாயகி;
பாண்டியன் மகளாய்ப் பரிவுடன் றோன்றி
யாண்டவன் மனத்தி னருந்துயர் தீர்த்து

மாமுடி தரித்து நீணில களித்தே
யெண்டிசை யனைத்து மியல்புறச் செயித்தாங்
மண்டமர் புரிந்த வல்லியே ; பின்னும்
வெள்ளியங் கிரியை மேவினின் வலத்தா
லெள்ளலி னந்தி யிடருறப் புடைக்க
வள்ளனின் வலத்தின் மாண்புகேட் டுவப்பி
னுள்ளுவந் தன்பா லோங்குமால் விடையி
னூர்ந்தவந் தவ்வையி னொருமுலை மறைய
வார்ந்தபூங் கொம்பி னசைந்தநின் வதனைப்
பேர்த்துநா மதிநாட் புணர்த்தது மென்ன
மணம்புரிந் தவற்கு மணிமுடி யீந்தும்,
பொன்மாலை வேட்ட புணரியை யழைத்தும்,
மண்மாட்டு வந்து மலையத் துவசனை
யழைத்தவன் றனக்கு மழிவிலாப் பதவி
கொடுத்தநின் வலத்தைக் குறித்திடற் குரித்தோ ;
வன்னையே, நின்வயின் பாலுரைத் திடுமோர்
விண்ணப்ப மிதனை வினவுவை யன்னை;
யெற்கொரு பெண்மக வீந்தனை யதுவுந்
தக்கநல் லறிவிற் றகவில தாகியும்;
பேதைமைக் குணமே பெருகிய தாகியு
மின்னதென் றறியா வியல்புடைத் தாகியு
நன்மை தீமை நாடில தாகியும்
பொறையுஞ் சாந்தமும் பொருந்தில தாகியு
மானவீன மதிக்கா தாகியுங்
கோணுறு மறிவுடைக் குழந்தையா மிதனை
வேண்டுமென் றெற்குநீ விருப்புட னளித்ததோ

வம்மநின் பெருமை யாதென வுன்னுவ
னிம்மையி லெனக்கில் விடாமைத் தனையா
லம்மையே யிதனையு மாற்றுகிற் பேனோ ;
னிரவும் பகலு மிதனையுன் னுங்கா
லிருகணுந் துயிலற் கியலா தாகி
யனலிடு மெழுகி னுயதென் னுள்ள
முணர்வுகொள் ளுடலு முடன்வெறி தாயது
பெருங்கடன் காரிற் போதுற லானே
னென்னுளத் தியல்புகண் டிரங்குவா யெனப்
பொன்னடிக் கினிது புகன்றவின் னாப்ப
மன்னநின் வலத்தினை யறிவதற் கெளிதோ
காளமே கத்தைக் கவிமேக மாக்கிய
சீலியெற் செய்த்தற் கென்னுறு வுறுத்துக
காட்டினிற் கோல்கொண் டாட்டினை மேய்த்து
வேட்டிமை யறிவிலாக் கோட்டின்மே னின்று
கிட்டரு தறித்த கிளர்ச்சியி லறிவனை
நாட்டினிற் காளியா னயத்ததா சப்பெயர்
சூட்டியன் னைற்றுந் தூயநல் லறிவிற்
பாட்டியற் கவிசெயும் பண்பினை யருளுந்
தாட்டுணை தொழுவரு டருகவெற் சேய்க்கே
ஞானசம் பந்தத் தியலை வண்ணா
ஞானசம் பந்த நாயகற் கன்று
யூனமின் முலைப்பா லூட்டிமெய் யுதவி
மேலாந் துணைநற் குய்த்திடு மதுபோற்
போதகி யவ்வா புகட்டவெற் சேய்க்கே
அம்பலத் தாடு மய்யர்பா லன்னே

பிம்பரிற் காணா மெழிற்பூங் கொம்பே;
யாரணி பூரணி யரியயன் காணா (220)
நீரணி மௌலி நிமலனோர் பாகி;
காரணி நின்னைக் கருதுநர் மனத்திற்
பூரண வருளைப் புகட்டுவிப் போயே;
யருளுடை மனத்தி னகலா தவளே;
யிருளுடை மனத்துக் கெட்டா தவளே;
நின்னைத் துதிக்கு நெறியறி யேன்றன்
புன்சொலை யின்சொலாய்ப் போற்றியெற் சேய்க்கு
நல்லறி வதனை நாட்டுக நன்மைசேர்
தெள்ளறி வுடைத்தாய்த் தேற்றுக தீமையார்
புல்லறி வதனைப் போக்குக பொறையார்ந் (230)
துள்ளநற் றொழிலினை யூட்டுக வுனையலாற்
பின்னையா ரெற்குளர் பேசுக பேதுறு
தன்னைபோ லென்சொலை யாதரித் தருடரு
மங்குலா ரிஞ்சிசூழ் மதுரை
யங்கயற் கண்ணிநின் னலர்மல ரடியே. (235)

முற்றிற்று.